# அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செய்திக்குறிப்பு

சமூகப்பாதுகாப்புத்துறையில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து பின் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பாதுகாவலர் பணியிடம் - 1 (ஆண் மட்டும்), சமையலர் - 1 (இருபாலர்), காவலர் -1 (ஆண் மட்டும்), தோட்டப்பணியாளர் -1 (இருபாலர்), காவலர்-சுத்திகரிப்பாளர்-1 (ஆண் மட்டும்) முதலிய காலிப்பணியிடங்களை முன்னாள் இராணுவத்தினர் மற்றும் பிற்பட்ட முஸ்லீம் வகுப்பினைச் சார்ந்த முன்னுரிமை பெற்ற சமூகப்பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களில் கல்வி பயின்ற/பயின்று வரும் மாணவ/மாணவியரைக் கொண்டு நிரப்பப்பட உள்ளது. தகுதியானவர்கள் அதற்கான படிவத்தினை மாவட்ட இணைய தள முகவரி www.ariyalur.nic.in அல்லது www.socialdefence.tn.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து கல்வி மற்றும் இதர சான்றின் ஒளிநகலுடன் 25.03.2017க்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும்வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் விபரம் தேவைப்படின் அலுவலக வேலை நாட்களில் பின்வரும் முகவரியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, அரசு பல்துறை வளாகம், 2வது தளம் ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர். போன் 04329 - 224210. தொடர்புக்கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் எ. சரவணவேல்ராஜ் அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

முகவரி: இயக்குநர் அலுவலகம், சமூகப்பாதுகாப்புத்துறை,
300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ்,
அபிராமி தியேட்டர் அருகில், சென்னை- 600 010.
தொலைபேசி எண் 044-26426421 / 26427022.

மாவட்ட ஆட்சித்தலைவர்